ADDITIONAL CONTROLLER OF EXAMINATIONS ★ AU CHENNAI 600 025

வரிசை எண் | | | | | | | | | | |

அண்ணா பல்கலைக்கழகம் (பல்கலைக்கழகத் துறைகள்)

இ.பொ. / இ.தொ. (முழு நேரம்) – இறுதி பருவ நிலுவைத் தேர்வுகள், நவ / டிச 2024

(அனைத்து கிளைகளுக்கும் பொதுவானது)

பருவம் III

MA5355 & உருமாற்ற உத்திகளும் பகுதி வகைக்கெழுச் சமன்பாடுகளும்

(விதி - 2019)

நேரம் : 3 மணிகள் மொத்த மதிப்பெண்கள் : 100

**பகுதி - A (10 x 2 = 20 மதிப்பெண்கள்)**

| Q. No | Questions | Marks | CO | BL |
|---|---|---|---|---|
| 1 | தீர்க்க $p+q=pq$. | 2 | 1 | L2 |
| 2 | தீர்க்க $\frac{\partial^2 z}{\partial x^2}-\frac{\partial^2 z}{\partial x\partial y}+\frac{\partial z}{\partial x}=0$. | 2 | 1 | L2 |
| 3 | $x\sin x=-1-\frac{1}{2}\cos x+\pi\sin x+2\sum_{n=2}^{\infty}\frac{\cos nx}{(n-1)(n+1)}$ எனில் $\frac{1}{3}-\frac{1}{15}+\frac{1}{35}-\cdots$ -ன் மதிப்பைக் காண்க. | 2 | 2 | L3 |
| 4 | $(0,2\pi)$ என்ற இடைவெளியில் $f(x)$ என்ற சார்பின் ஃபூரியர் தொடர் $f(x)=\sum_{n=1}^{\infty}\frac{\sin nx}{n}$ எனில் $f(x)$-ன் சராசரி வர்க்கமூலப் பெறுமானத்தைக் காண்க. | 2 | 2 | L4 |
| 5 | $u_{xx}-2\sin x\ u_{xy}-\cos^2 x\ u_{yy}-\cos x\ u_y=0$ என்ற பகுதி வகைக்கெழு சமன்பாட்டை வகைப்படுத்துக. | 2 | 3 | L3 |
| 6 | மாறிகளை வேறாக்கல் முறையில் தீர்க்க $\frac{\partial u}{\partial x}=2\frac{\partial u}{\partial t}+u,\ u(x,0)=6e^{-3x}$. | 2 | 3 | L3 |
| 7 | $F_C[f(x)\cos ax]=\frac{1}{2}[F_C(s+a)+F_C(s-a)]$ எனக் காட்டு. | 2 | 4 | L1 |
| 8 | $f(x)$ என்பது $x$ -ல் ஓர் இரட்டைச் சார்பு எனில் $F(s)=F[f(x)]$ என்பது $s$ –ல் இரட்டைச் சார்பு எனக் காட்டு. | 2 | 4 | L2 |
| 9 | மதிப்பிடுக $Z\left[\frac{1}{n}\right]$. | 2 | 5 | L2 |
| 10 | $y_n=A3^n$ என்ற வரிசையில் உள்ள மாறிலியை $A$ நீக்கி வேறுபாட்டு சமன்பாட்டைக் உருவாக்கு. | 2 | 5 | L2 |

**பகுதி – ஆ (5 x 13 = 65 மதிப்பெண்கள்)**

| Q. No | Questions | Marks | CO | BL |
|---|---|---|---|---|
| 11 (a) (i) | தீர்க்க $\frac{\partial^3 z}{\partial x^3}-2\frac{\partial^3 z}{\partial x^2\partial y}=2e^{2x}+3x^2y$. | 8 | 1 | L5 |
| (ii) | $z=f(x+iy)+g(x-iy)$ என்ற சமன்பாட்டில் உள்ள எதேச்சை சார்புகளை $(f,g)$ நீக்கி பகுதி வகைக்கெழுச் சமன்பாட்டை உருவாக்குக. | 5 | 1 | L3 |
| | **OR** | | | |
| 11 (b) (i) | தீர்க்க $x(y^2+z)p+y(x^2+z)q=z(x^2-y^2)$. | 8 | 1 | L5 |
| (ii) | தீர்க்க $yp=2xy+\log q$. | 5 | 1 | L5 |
| 12 (a) (i) | இரண்டாம் ஒத்திசைவு சார்பு வரையிலான ஃபூரியர் தொடரைக் காண்க:<br>$x$: $0$, $\frac{\pi}{3}$, $\frac{2\pi}{3}$, $\pi$, $\frac{4\pi}{3}$, $\frac{5\pi}{3}$<br>$y$: 0.8, 0.6, 0.4, 0.7, 0.9, 1.1 | 8 | 2 | L4 |
| (ii) | $f(x)=\begin{cases} x, & -1<x\le 0 \\ x+2, & 0<x<1 \end{cases}$ -ன் ஃபூரியர் தொடரைக் காண்க. | 5 | 2 | L3 |
| | **OR** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 12 (b) (i) | $(-1,1)$ என்ற இடைவெளியில் $f(x) = e^{-x}$ என்ற சார்பின் சிக்கல் சார்பு வடிவிலான ஃபூரியர் தொடரைக் காண்க. | 8 | 2 | L3 |
| (ii) | $(-\pi, \pi)$ என்ற இடைவெளியில் $f(x) = \lvert\cos x\rvert$ என்ற சார்பின் ஃபூரியர் தொடரைக் காண்க. | 5 | 2 | L4 |
| 13 (a) (i) | நிலைமாறா கட்டுப்பாட்டில் உள்ள $l$ நீளமுள்ள கம்பியின் இரு முனைகள் $A$ மற்றும் $B$ முறையே $0^oC$ மற்றும் $100^oC$ வெப்பநிலையில் உள்ளன. முனை $B$ -ன் வெப்பநிலை உடனடியாக $0^oC$-க்கு குறைக்கப்படுகையில் எந்த நேரத்திலும் $(t)$ முனை $A$-யிலிருந்து $x$ தொலைவில் உள்ள புள்ளியில் வெப்ப பரவலைக் கணக்கிடுக. | 13 | 3 | L6 |
| | **OR** | | | |
| 13 (b) (i) | முடிவற்றது என கருதுமளவுக்கு நீளமுள்ள, புறப்பகுதி காப்பிடப்பட்ட, செவ்வக தட்டின் அகலம் 20 செ.மீ எனக் கொள்க. அத்தட்டின் ஒரு குறுகிய மற்றும் இரு நீண்ட முனைகளின் வெப்பநிலை $0^oC$ மற்றும் $x = 0$ என்ற ஆயஅச்சில் உள்ள தட்டின் மற்றுமொரு குறுகிய முனையின் வெப்பநிலை $u = \begin{cases} 10y, & 0 \le y \le 10 \\ 10(20-y), & 10 \le y \le 20 \end{cases}$ எனில் அத்தட்டின் மாறாநிலை வெப்ப பரவலைக் காண்க. | 13 | 3 | L5 |
| 14 (a) (i) | $f(x) = \begin{cases} 1, & \lvert x\rvert < 2 \\ 0, & \lvert x\rvert > 2 \end{cases}$-ன் ஃபூரியர் உருமாற்றத்தை காண்க மேலும் $\int_0^\infty \frac{\sin x}{x} dx$ -ஐ மதிப்பிடுக. | 8 | 4 | L5 |
| (ii) | பர்சேவல் முற்றொருமையைப் பயன்படுத்தி மதிப்பிடுக $\int_0^\infty \frac{x^2}{(a^2+x^2)^2} dx$. | 5 | 4 | L4 |
| | **OR** | | | |
| 14 (b) (i) | $e^{-a\lvert x\rvert}$-ன் ஃபூரியர் உருமாற்றத்தை காண்க மேலும் $\int_0^\infty \frac{1}{(x^2+a^2)^2} dx$, $a > 0$ மதிப்பிடுக. | 8 | 4 | L5 |
| (ii) | ஃபூரியர் தொகையீட்டு சூத்திரத்தைப் பயன்படுத்தி $e^{-x}\cos x = \frac{2}{\pi}\int_0^\infty \frac{\lambda^2+2}{\lambda^4+4} \cos \lambda x \, d\lambda$ எனக் காட்டுக. | 5 | 4 | L3 |
| 15 (a) (i) | பகுதிப் பின்னமாக்கல் முறையில், $Z^{-1}\left[\frac{3z^2-18z+26}{(z-2)(z-3)(z-4)}\right]$ கணக்கிடுக. | 8 | 5 | L5 |
| (ii) | மதிப்பிடுக $Z[a^n \cos n\theta]$. | 5 | 5 | L4 |
| | **OR** | | | |
| 15 (b) (i) | வேறுபாட்டு சமன்பாட்டைத் தீர்க்க $y(n+3) - 3y(n+1) + 2y(n) = 0$, $y(0) = 4, y(1) = 0, y(2) = 8$. | 8 | 5 | L5 |
| (ii) | சுருளல் தேற்றத்தைப் பயன்படுத்தி, மதிப்பிடுக $Z^{-1}\left[\frac{z^2}{(z-1)(z-3)}\right]$. | 5 | 5 | L4 |

**பகுதி – இ (1 x 15 = 15 மதிப்பெண்கள்)**

| Q. No | Questions | Marks | CO | BL |
|---|---|---|---|---|
| 16 (a) (i) | $x = 0$, $x = l$ ஆகிய புள்ளிகளில் இறுத்துக்கட்டப்பட்ட இழை சமநிலையில் ஓய்வில் உள்ளது. அதன் ஒவ்வொரு புள்ளியும் திசைவேகம் $\lambda x(l-x)$ கொடுக்கப்படும் போது இழையின் இடப்பெயர்ச்சி $y(x,t)$ -ஐக் காண்க. | 15 | 3 | L5 |



ADDITIONAL CONTROLLER OF EXAMINATIONS ★ AU CHENNAI 600 025